ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2078/22 - 2018 ජූලි මස 03 වැනි අඟහරුවාදා - 2018.07.03

*2078/22 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 15/2014*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 66 ஆம், 69 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 117 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து மற்றும் குடியியல் வான்செலவு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*நிமல் சிரிபால டி சில்வா,*
*போக்குவரத்து மற்றும் குடியியல் வான்செலவு அமைச்சர்.*

*கொழும்பு,*
*2018, யூன் 26.*

*ஒழுங்குவிதிகள்*

*1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குடியியல் வான்செலவு (ஆளணியினருக்கு மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (1) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி, இதற்கான அட்டவணையின் நிரை IV இல் குறித்துரைக்கப்பட்டவாறும் மற்றும் முறையான செயற்படுத்துகின்ற நியமங்களிலும் குறித்துரைக்கப்பட்டவாறும், விடயத்துக்கேற்ப, ஓர் உரிமத்துக்கான அல்லது அனுமதிப்பத்திரத்துக்கான எவரேனும் ஆளினால் அல்லது நிறுவனத்தினால் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதுடன் திருப்திப்படுவதன்மேல், முறையான உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம், அல்லது அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு மறுக்கலாம். விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமத்தின் அல்லது*

அனுமதிப்பத்திரத்தின் வகுதியானது இதற்கான அட்டவணையின் நிரை II இல் குறித்துரைக்கப்படுகின்றது என்பதுடன், அட்டவணையின் நிரை IV இல் குறித்துரைக்கப்பட்ட செயற்படுத்துகின்ற நியமங்களுக்கான வழிகாட்டுநெறிகள், அதன் நிரை III இல் குறித்துரைக்கப்பட்டவாறான கைந்நூல்களில் இருத்தலும் வேண்டும்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட, விடயத்துக்கேற்ப, ஏதேனும் உரிமத்தின் அல்லது அனுமதிப்பத்திரத்தின் வழங்குகை, திருத்தம், புதுப்பித்தல், இடைநிறுத்துகைக்கான மற்றும் இல்லாதொழித்தலுக்கான ஏது என்பவற்றுக்கான நடவடிக்கை முறை, அத்தகைய ஏதேனும் உரிமத்துக்கு அல்லது அனுமதிப்பத்திரத்துக்கு ஏற்புடையதான நியதிகளும் நிபந்தனைகளும் அவற்றோடு இணைந்துள்ள சிறப்புரிமைகளும் அட்டவணையில் நிரை IV இல் குறித்துரைக்கப்பட்டு 2011, யூலை 05 ஆந் திகதிய 1713/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான அத்தகைய ஒவ்வொரு செயற்பாட்டுக்காகவும் இயைபான செயற்படுத்துகின்ற நியமங்களுக்கு இணங்கவிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பச் செய்முறைக் கட்டணமும், உரிம அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணமும் மற்றும் அதன் ஏதேனும் புதுப்பித்தலுக்கான கட்டணமும், 2014, யூலை 02 ஆந் திகதிய 1869/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபைக் கட்டணங்களும் விதிப்பனவுகளும் பற்றிய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

5. ஒவ்வோர் உரிமம்வைத்திருப்பவரும், 2 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட, விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் முடிவுறும் திகதிக்கு முன்னர், அத்தகைய உரிமத்தின் அல்லது அனுமதிப்பத்திரத்தின் புதுப்பித்தலுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் எந்த ஆளுக்கு அல்லது நிறுவனத்துக்கு உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆளினாலான அல்லது நிறுவனத்தினாலான, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட வான்செலவுக் காப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான ஏதேனும் ஏற்பாட்டின் ஏதேனும் மீறுகை பற்றிய எண்பிப்பைப் பணிப்பாளர் தலைமையதிபதி கொண்டிருப்பதன் மீது, விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

7. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட முடிவினால் இன்னலுறும் எவரேனுமாள் அல்லது நிறுவனம், அத்தகைய ஆளுக்கு அல்லது நிறுவனத்துக்கு அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது வேலை நாட்கள் முடிவுறுமுன்னர், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 112 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

8. 1955.07.01 ஆந் திகதிய 10812 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1955 ஆம் ஆண்டின் வான் கலமோட்டல் ஒழுங்குவிதிகளுள் பின்வரும் ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றன :-

(அ) IV ஆம் அத்தியாயத்தின் 22 முதல் 30 வரையிலான ஒழுங்குவிதிகள் ;
(ஆ) V ஆம் அத்தியாயத்தின் 48 முதல் 73 வரையிலான ஒழுங்குவிதிகள் ; அத்துடன்
(இ) VI ஆம் அத்தியாயத்தின் 74 முதல் 80 வரையிலான ஒழுங்குவிதிகள்.

9. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக-

"சமவாயம்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

**அட்டவணை**

| நிரைI<br><br>செயற்பாடு | நிரை II<br><br>உரிமம் | நிரை III<br><br>கைந்நூல்/<br>கைந்நூல்கள் | நிரை IV<br><br>செயற்படுத்து<br>கின்ற நியமங்கள்<br>(செநி) |
|---|---|---|---|
| பறத்தல் | (அ) மாணவ விமானமோட்டி உரிமம்<br><br>(ஆ) தனிப்பட்ட விமானமோட்டி- ஆகாய விமானம், வான்கப்பல், உலங்கு வானூர்தி அல்லது சக்தியூட்டப்பட்ட உயர்த்தி ;<br><br>(இ) வர்த்தக விமானமோட்டி- ஆகாய விமானம், வான்கப்பல், உலங்கு வானூர்தி அல்லது சக்தியூட்டப்பட்ட உயர்த்தி ;<br><br>(ஈ) பல்பணிக் குழுவுடனான விமானமோட்டி- ஆகாய விமானம் ;<br><br>(உ) வான்நெறிப் போக்குவரத்து விமானமோட்டி- ஆகாய விமானம், உலங்கு வானூர்தி அல்லது சக்தியூட்டப்பட்ட உயர்த்தி ;<br><br>(ஊ) சறுக்கு வானூர்தி விமானமோட்டி ;<br><br>(எ) கட்டிலா ஆவிக்கூண்டு விமானமோட்டி ;<br><br>(ஏ) பறத்தற் கலமோட்டி ;<br><br>(ஐ) பறத்தற் பொறியியலாளர். | SLCAP 3010<br>SLCAP 3030<br>SLCAP 3040<br>SLCAP 3050<br>SLCAP 3080<br>SLCAP 3090 | IS 50<br>IS 08<br>IS 43<br>IS 51<br>IS 72<br>IS 67<br><br>IS 76<br>IS 69<br>IS 71 |
| வானூர்தி வடிவமைப்பு, உற்பத்தி, பேணுகை மற்றும் பொறியியல் | வானூர்திப் பேணுகை (தொழில்நுட்பவியலர்/ பொறியியலாளர்/விசைப்பொறிஞர் | SLCAP 3010<br>SLCAP 3030<br>SLCAP 3070 | IS 66<br>IS 145<br>IS 147<br>IS 50 |
| வான் போக்குவரத்துக் கட்டுப்பாடு | வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் | SLCAP 3010<br>SLCAP 3030<br>SLCAP 3040<br>SLCAP 3060 | IS 50<br>IS 55 |
| பறத்தல் தொழிற்பாடுகள் | பறத்தல் தொழிற்பாடுகள் அலுவலர்/பறத்தல் விரைந்தனுப்புநர்/ சிற்றரைப் பணிக்குழு வுறுப்பினர் | SLCAP 3010<br>SLCAP 3030<br>SLCAP 3100 | IS 49<br>IS 50 |
| வானூர்திக் கலையியல் நிலையத் தொழிற்பாடு கள் | வானூர்திக் கலையியல் நிலையத் தொழிற் படுத்துநர் | SLCAP 3010<br>SLCAP 3100<br>SLCAP 3030<br>SLCAP 3040 | IS 48<br>IS 50 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரை I*<br><br>*செயற்பாடு* | *நிரை II*<br><br>*உரிமம்* | *நிரை III*<br><br>*கைந்நூல்/ கைந்நூல்கள்* | *நிரை IV*<br><br>*செயற்படுத்து கின்ற நியமங்கள் (செநி)* |
|---|---|---|---|
| மருத்துவ | பறத்தலுக்கான வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு உரிமத்துக்கான அல்லது | SLCAP 3020 | IS 36 |
| வான்செலவுப் பயிற்சிச் செயற்பாடுகள் | வான்செலவுப் பயிற்சி நிறுவனத்தைத் தாபிப்பதற்கான அனுமதிப் பத்திரத்துக்கான மருத்துவத் தேவைப்பாடுகள் | SLCAP 3090<br>SLCAP 3070<br>SLCAP 3060<br>SLCAP 3100 | IS 67<br>IS 147<br>IS 50 |
| பொது | எல்லா உரிமத்துக்கும், இயைபான மதிப் பீட்டுக்கும், தகுதிச் சான்றிதழுக்கும் அல்லது அனுமதிப் பத்திரத்துக்கும் இயைபானது | | IS 68<br>IS 35 |

*07-540*